## இலங்கை றக்பி கால்பந்தாட்ட சங்கம் – 2016

இலங்கை றக்பி கால்பந்தாட்ட சங்கத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டு (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவக் குழுவின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவக் குழு பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சங்கத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி சங்கத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை றக்பி கால்ப்பந்தாட்ட சங்கத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டிற்குரிய செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்களிற்காக நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்களிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| செலவினங்கள் | 764,494 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் உரிய ஆவணங்கள் |
| இலங்கை பாடசாலை றக்பி சங்கத்திடமிருந்து பெறவேண்டிய பணம் | 17,492,313 | மீதி உறுதிப்படுத்தல்கள் |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சங்கத்தின் நிதி விளைவுகள் ரூபா 5,694,619 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 5,482,636 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 11,177,255 ஆன முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் நேரடிச் செலவினங்கள் ரூபா 27,703,856 ஆல் அதிகரித்த போதிலும் வருமானம் ரூபா 47,322,389 ஆல் அதிகரித்தமை மேற்படி முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொழும்பில் அமைந்துள்ள அரசாங்க பாடசாலையொன்றிற்கு வழங்கப்பட்ட ரூபா 5,100,000 தொகை அப் பாடசாலையினால் எந்தவொரு றகர் விளையாட்டு அபிவிருத்தி நடவடிக்கைக்கும் பயன்படுத்தப்படாமல் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பெயரில் நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) தேசிய சம்மேளனமொன்றில் ஒரு தடவை பதவியொன்றை வகித்த நபரொருவர் விளையாட்டு சங்கங்களின் அலுவலக பொறுப்பாளர்களாக மீண்டும் நியமிக்கப்படுவதை தடுப்பதற்கான கட்டளையை பெறுவதற்காக சங்கத்தின் பதவியணி உறுப்பினரொருவரால் உச்ச நீதிமன்றத்தில் தனிப்பட்ட பெயரில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் அவ் வழக்கிற்காக ரூபா 475,000 சட்டச் செலவினங்கள் சங்கத்தின் நிதியத்திலிருந்து ஏற்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சங்கத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | நிதியேற்பாடுகள் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நிதி முகாமைத்துவம் | பெறப்பட்ட நிதிகள் சங்கத்தின் நோக்கங்களிற்காக முழுமையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |